முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பீர்முகமது அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

17.05.2019, வெள்ளிக்கிழமை

1. **சற்குருநாதனே அரங்கா போற்றி**
**சங்கடம் போக்கிடும் அரசா போற்றி**
**அற்புதம் நிகழ்த்தி கலியுகத்தில்**
**ஆன்மீக ஞானவழி காட்டிடும்**
2. காட்டிடும் ஆறுமுக ஞானியே
கனிவுபட உன் பெருமை கூறியே
வாட்டமற நித்ய பிரசன்ன ஆசியை
வழங்குவேன் **விகாரி விடை திங்கள்**
3. **திங்களிலே சூலதிகதி புகர் வாரம்**
**(விகாரி வருடம் வைகாசி மாதம் 3ம் நாள் 17.05.2019, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு பீர்முகமது யானும்**
ஓங்கார உலகு அமைய உரைப்பேன்
ஓம் என்று அரங்கன் துவக்கி
4. துவக்கி செய்து வரும் தருமம்
தொடர்ந்து நடந்து வரும்படி
புவனத்தார் இணைந்து கலந்து
புண்ணியகதியை அடைந்து வர
5. வருகவே வாராந்திர மாதாந்திர
வல்லமையான ஞானிகள் தமை
உருகியே வேண்டுதல் செய்து
உயர் வழிபாடு தருமமும் தொடர
6. தொடரவே உலக செயல்பாடு
தடையிலா வளர்ச்சி காணும்
இடர் என்பது இல்லா சமூக
ஏற்றமும் மாற்றமும் காணும்
7. காணவே தானதருமமுடன்
கனிவே ஞானத்திறவுகோலென
ஞானவழி காட்டும் அரங்கன்
நற்செயல் ஒன்றே உயர் ஞானம் ஆகும்
8. ஆகவே அரங்கன் வாழும்
ஆற்றல் மிகுந்த பிரணவக்குடில்
யுகமாற்றம் தரும் ஞானவீடு
உயர்வென கருதி மக்கள் வர
9. வருபவர்க்கு வறுமை விலகும்
வஞ்சம் பிணி பகை ஒழியும்
ஆறுதலான உறவு துணையென
அனைத்து வகையும் உதவி கூடி

10. கூடியே உலகியல் வாழ்வில்
குழப்பம் பேதநிலை இல்லா
நாடிட ஞான சிந்தை தெளிவுபட
ஞானியர் வழி சகலதும் அடைவர்

11. அடைவரே கலி இடர் வென்று
ஆனந்தமான யோக வாழ்வாய்
தடைபடா பெரும் பேறு அடைவர்
தாமுரைத்த நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பீர்முகமது அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

உண்மை ஞான சற்குருநாதனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே போற்றி போற்றி. மக்களின் துன்பங்களை போக்கிடும் ஞான அரசனே போற்றி போற்றி. ஏராளமாய் உலகினில் அற்புதம் நிகழ்த்தி கலியுகத்தினில் ஆன்மீக ஞான வழி காட்டிடும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே கனிவுபட அரங்கா உமது பெருமைகளை கூறியே உலகினில் முருகப்பெருமான் தலைமையில் ஞான உலகம் அமைய விகாரி வருடம் வைகாசி மாதம் 3ம் நாள் 17.05.2019, வெள்ளிக்கிழமையான இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே பீர்முகமது யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பீர்முகமது.

ஓம் முருகா, ஓம் அகத்தீசாய நம என்றே ஞானத்தலைவனையும் சித்தர்கோனையும் முன்னிறுத்தி ஞானிகளை வணங்கி துவக்கி அரங்கன் செய்து வருகின்ற தர்மங்கள் எல்லாம் தொடர்ந்து நடந்திட அவரவரும் அரங்கனின் தானதருமப் பணிகளுக்கு தாராளமாய் பொருளுதவிகள் செய்தும், தொண்டுகள் செய்தும் அரங்கனுடன் இணைந்து தர்மங்களைச் செய்து புண்ணியகதியை அடைந்திட வேண்டும்.

தினம்தினம் ஞானிகளை மனம் உருகி பூஜைகள் செய்தும் வாரம் முழுதும் மாதந்தோறும் வல்லமைமிக்க ஞானிகளை பலவாறாய் மனம் உருகி ஞானிகளை வணங்கி வர, உயர் வழிபாடுகளை தருமங்களுடன் தொடர்ந்து செய்து வர, உலகின் செயல்பாடுகள் எல்லாம் தடையின்றி வளர்ச்சி காணும். துன்பம் என்பதே இல்லாத சமூக முன்னேற்றமும் வளர்ச்சியும் அடைந்திடும்.

உலகினில் உள்ள அனைத்து மார்க்கங்களிலும் அரங்கன் கனிவுடன் உலகோர்க்காக எளிமையாக அருளிய தானதருமமுடன் கனிவே ஞானத்திறவுகோல் எனும்படியான தயவே ஞானவீட்டின் திறவுகோல் என்பதை வலியுறுத்தி தயவு வழியில் தர்மவழியில் உலகோர்க்கு வழிகாட்டும் அரங்கன் செய்யும் தானதரும செயல்களும் உயர்ஞான கொள்கைகளுமே உலகின் உயர் ஞானமாகும்.

ஆதலினால் ஆறுமுக அரங்கன் வாழும் ஆற்றல் மிகுந்த ஓங்காரக்குடிலே உலகினில் கலியுகம் மாற்றி ஞானயுகம் படைக்கும் வல்லமைமிக்க உயர் ஞான வீடாகும். ஆதலினால் ஓங்காரக்குடிலே உயர் ஞானக்குடில் என்றே உளமார வணங்கி பயபக்தியுடன் அரங்கனின் ஓங்காரக்குடிலிற்கு வருகை தர, அரங்கரின் அற்புதம்மிக்க ஞானக்குடிலாம் ஓங்காரக்குடிலிற்கு நம்பிக்கையுடன் வந்தவர்களது வாழ்வினில் உண்டான வறுமை விலகும், வஞ்சம் ஒழியும். பிணிகள் எல்லாம் விலகி ஓடும். பகைமை உணர்வுகளும், பகையும் நீங்கும். ஆறுதல் அளிக்கும்விதமாக அவர்களது உறவுகள் நல்லுறவுடன் கூடும், நல்ல நட்புகள் உருவாகிடும். எல்லா வகையிலும் அவர்களுக்கு எளிமையாய் உதவிகள் கிடைக்கப் பெற்று உலகியல் வாழ்வினில் குழப்பமில்லாமல் பேதாபேதங்களில்லாமல் ஞானசிந்தை தெளிவுபட ஞானிகளின் அருளாசிகளைப் பெற்று சகலவிதமான வளங்களை பெற்று சிறப்படைவார்கள். கலியுகத்தின் மாமாயையில் இருந்து விடுபட்டு கலியுக துன்பங்களை வென்று ஆனந்தமயமான யோகமான வாழ்வை வாழ்ந்து யோகஞானமும் கிடைக்கப்பெற்று தடையின்றி பெறுதற்கரிய பெரும்பேற்றையும் பெற்று சிறப்படைவார்கள் எனக் கூறுகிறார் மகான் பீர்முகமது.

–சுபம்–